# திராவிடநாடு

23—10—60 | வாரவெளியீடு | விலை 16 காசு


# முனைவாய் இன்றே!

—[G. N. இலட்சுமணன்]—

ஐந்தாண்டுத் திட்டமென்ற இரண்டின் பேரால்
அடுக்கான கோடிகளை வடக்கே கொட்டி
'சிந்திரியும்' 'ரூர்கேலா' 'சித்தரஞ்சன்'
சிறந்த பெருஞ்செழிப்பான தொழில் வளங்கள்
தந்திரமாய் முடித்த பின்னும் மூன்றும் திட்ட
சங்கதியும் அவ்விதமே ஒதுக்கி யாச்சு,
இந்தவிதம் வடவர் நம்மை இழிவாய் எண்ணி
ஏழ்மையிலே வாட்டுகின்றார் திட்டம் போட்டு

இத்தனைக்கும் காரணம் யாது? ஐயம் என்ன?
இங்கிருக்கும் அரசுக்கு அதட்டிக் கேட்கும்
சத்தியில்லை; நம்மை மட்டும் இழித்துப் பேசி
சத்தமிட, அச்சுறுத்தச் சளையார் நண்பா!
புத்தியடா! நமக்கெல்லாம் வாய்க்கப் பெற்ற
புதிரான அரசின் போக்கைக் காணில்,
எத்தனை நாள் இத்துன்பம் எண்ணிப்பாரு
எதுவழியோ அதைச்செய்ய முனைவாய் இன்றே.

# புறக்கணிக்கப்பட்ட தென்னகம்

—[எ. கலைமுகிலன்]—

இதுவரை போடப்பட்ட இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தென்னகத்துக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை; தில்லித் தேவதைகளால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைத் தெள்ளத் தெளிவாக நாட்டவர்க்கு விளக்கவும், தில்லித்தேவதைகளுக்குத் தென்னவரின் குரலை எடுத்துக் காட்டவும் 'ஐந்தாண்டுத் திட்ட அநீதிக் கண்டன வாரம்' என்று 10—10—60 முதல் 16—10—60 வரை கொண்டாடுமாறு நமது கழகம் கட்டளை பிறப்பித்தது.

கட்டளை பிறப்பித்ததும், வடக்கின் திருவடி தொழுது, பதவிக்கு ஏங்கிக் கிடப்பவர்கள் 'ஆகாது! அடுக்காது! அநியாயம்! அக்ரமம்! தெற்குப் புறக்கணிக்கப்படவில்லை; தேயவில்லை! வளர்கிறது!' என்று வறட்டுக் கூச்சலிடத் தொடங்கி இருக்கிறார்கள்.

'வடக்கு — தெற்கு என்பதெல்லாம் வெற்றுக் கூச்சல்; அர்த்தமற்ற பேச்சு!' என்று கூறி வரும் குறைமதிபடைத்தவர்களின் மூடிய விழிகள் திறக்கப்படட்டும்; பார்க்கட்டும் புள்ளி விவரங்களை; புரிந்துகொள்ளட்டும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது தென்னகம் என்ற உண்மையை! உணர்ந்த பின்னராவது திருந்தட்டும் என்று கீழே சில புள்ளி விவரங்களை—முக்கியமான—பெரும் திட்டங்கள் சிலவற்றைத் தருகிறோம்.

முதல்ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பெரியனவாகவும், நடுத்தரமானவையாகவும் தீட்டப்பட்ட நீர்ப்பாசனத் திட்டத்தால் 63 இலட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் கிட்ட வசதி செய்யப்பட்டது. இதில் தென்னகத்தின் பங்கையும், வடக்கின் பங்கையும் பாருங்கள்:

### வடக்கில்:

| மாநிலங்கள் | முதல் திட்டத்தின் நீர்ப்பாசன வசதி. |
|---|---|
| உத்தரப்பிரதேசம் | 16 இலட். 74 ஆ.ஏ. |
| பஞ்சாப் | 15 „ 20 „ |
| பீகார் | 6 „ 89 „ |
| மேற்கு வங்கம் | 6 „ 39 „ |
| பம்பாய் | 5 „ 69 „ |
| இராஜஸ்தான்-பெப்சு | 3 „ 86 „ |
| இதர மாநிலங்கள் | 3 „ 12 „ |
| | 57 இலட். 89 ஆ.ஏ. |

ஆகமொத்தம் வடக்கு மாநிலங்களில் 57 இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

அதே நேரத்தில் தென்னகத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம் வருமாறு:

### தெற்கில்:

| மாநிலங்கள் | முதல் திட்டத்தின் நீர்ப்பாசன வசதி. |
|---|---|
| சென்னை | 2 இலட். 40 ஆ.ஏ. |
| ஆந்திரா | 1 „ 61 „ |
| மைசூர் | 39 „ |
| திரு-கொச்சி | 38 „ |
| | 4 இலட். 78 ஆ.ஏ. |

ஆகமொத்தம் தென்னகத்தின் பங்கு 4 இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் மட்டுமேயாகும்.

மொத்தம் 63 இலட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளதில், மக்கள் தொகையின்படி கணக்கிட்டால், தென்னகத்துக்குச் சேரவேண்டிய நியாயமான அளவு ஏறத்தாழ 18 இலட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கிடைக்கவேண்டிய அளவிலேயே 4ல் ஒரு பங்குதான் கிடைத்திருக்கிறது!

முதல் திட்டத்திலேதான் இந்த அவலநிலை என்றால், இரண்டாவது திட்டத்திலும் நியாயமான பங்கு கிடைக்கவில்லை.

இரண்டாவது திட்டத்தில் உள்ள புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் விவரம் வருமாறு:

### வடக்கே:

| மாநிலங்கள் | திட்டங்களின் மதிப்பு. |
|---|---|
| பீகார் | 63 கோடி ரூ. |
| பம்பாய் | 142 „ |
| மத்திய பிரதேசம் | 23 „ |
| உத்தரபிரதேசம் | 44 „ |
| மேற்கு வங்கம் | 26 „ |
| இராஜஸ்தான் | 14 „ |
| மற்ற மாநிலங்கள் | 23 „ |
| ஆகமொத்தம் | 335 கோடி ரூ. |

### தெற்கில்:

| | |
|---|---|
| ஆந்திரா | 15 கோடி ரூ. |
| ஐதராபாத் | 11 „ |
| சென்னை | 4 கோடி 69 லட். |
| மைசூர் | 4 „ 78 „ |
| திரு-கொச்சி | 5 „ 64 „ |
| ஆகமொத்தம் | 41 கோடி 11 லட். |

ஆக, கிடைத்துள்ள இவ்விவரப்படி மொத்தம் செலவிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 376 கோடியே 11 இலட்சமாகும்.

செலவிடப்படுவதாக உள்ள இந்தத்-தொகையில் தென்னகத்துக்கெனக் கிடைத்துள்ள ரூபாய் 41 கோடியே 11 இலட்சம்தான்!

(4-ம் பக்கம் பார்க்க)

# 'நியாய நிலைக் கடைகள்'

19 ] ஆண்டுச் சந்தா ரூ. 8. (23—10—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 15

பலதடவை அரசினர் நியாய விலைக் கடைகளைத் திறந்து, அதன் வாயிலாக நாட்டில் ஏற்பட்டுக்கொண்டு வருகின்ற இல்லாமையை— போதாமையைப் போக்க முயன்றிருக்கின்றனர். ஆனால், இதன் மூலம் சர்க்காரின் உத்தேசம் நிறைவேற்றப்பட்டதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டிய அளவுக்கு நியாய விலைக் கடைகளில் நியாயம் வழங்கப்படாதநிலை ஏற்பட்டுவிடுகிறது.

திறக்கப்படும் இக்கடைகளால் பொதுமக்களுக்கு உண்மையான பலன் கிடைக்கின்றதா என்பதையும் அரசினர் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ கடமைக்குச் செய்வதாக எண்ணி, கண்துடைப்பாக இருக்கட்டும் என்று நினைத்து 'இத்தனை கடைகள் திறந்தோம்; இத்தனை டன் அரிசி விற்பனையாயிற்று' என்று கணக்குக் காட்டுவதை நோக்கமாகக் கொள்ளமல் ஏழை எளியவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அக்கடைகள் நடைபெறுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். 'நியாயவிலைக் கடை' என்ற பெயரே பொருத்தமற்றதாகும். ஒன்றை நியாயவிலைக் கடை என்று அழைத்தால் மற்றது நியாயமற்ற கடை என்று ஆகின்றது. தனது ஆட்சியில் அநியாயத்தையும் ஒரு பக்கம் உலவவிட்டுவிட்டு இன்னொரு பக்கம் நியாயத்தை நிலைநாட்டும் முயற்சி வீணாகவே முடியும். அநியாயத்தை அகற்றுவது அரசினரின் கடமை. எப்பாடுபட்டேனும் அதனை ஒழித்தாகவேண்டும். ஆனால் அந்த முயற்சியில் ஈடுபடாமல் அரசினர் தாங்கள் சில கடைகளைத் திறந்து 'நியாயவிலைக் கடை' என்று அவற்றைப் பெயரிட்டு அழைப்பது கேலிக்கு இடமாகின்றது.

எப்படியோ பெயர் நியாயவிலைக் கடை என்று அமைத்துவிட்டார்கள். அந்தப் பெயருக்காகவாவது அங்கே நியாயம் நிலவவேண்டும்; நிலைக்கவேண்டும். ஆனால் கடந்தகால அநுபவம் இந்த எச்சரிக்கையை விடுக்கச் செய்கிறது. தனிப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட கடைகள் பெரும்பாலும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கோ, அவர்களது உறவினர்களுக்கோ, அவர்களோடு தொடர்புடையவர்களுக்கோதான் தரப்பட்டன. சில இடங்களில் கூட்டுறவு நிறுவனங்களின் பெயரால் நடைபெற்ற கடைகளிலும் மேற்கூறப்பட்ட 'இன'த்தவரின் ஆட்சியும் தலையீடும் இருந்தது. இதனால் நியாயவிலைக் கடையில் கிடைத்துவந்த பொருள்கள் சிலபேருக்கு — சலுகை பெற்ற சில பேருக்கு மட்டும் வாய்த்த பேருக இருந்தது. மற்ற பொதுமக்கள் கடைக்கு வந்து வந்து வறிதே மீளும் நிலைதான் ஏற்பட்டது. அரிசி 'இன்று வரும், நாளை வரும்' என்று சொல்லிச் சிலபேரை விரட்டிவிட்டு வேறு சிலருடைய வீடுகளுக்கு மூட்டை மூட்டையாக அனுப்பியதையும், சர்க்கரையைப் பலபேருடைய கண்ணிலேயும் காட்டாது மறைத்து சிலருக்குமட்டும் நிறுத்துக் கொடுத்ததையும் மக்கள் இன்னும் மறக்கவில்லை. சில இடங்களில் ஏமாற்றம் கண்ட பொதுமக்கள் நியாயவிலைக் கடை என்ற பெயருக்கு முன்னால் 'அ' என்ற எழுத்தைச் சேர்த்த நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன. நியாய விலைக் கடைகள் ஏதோ ஆளும் கட்சியினரின் அலுவலகம் என்ற நினைப்போடு பலர் நடந்துகொண்டனர். இப்படிப்பட்ட நிலைமைகள் இப்போது திறக்கப்படும் கடைகளிலும் இருக்கும் என்றால் அவற்றைத் திறப்பதைவிடத் திறவாமலே இருப்பது நல்லது 'குறைகூறுவதே இவர்களது குணம்' என்று சொல்லிவிடலாம் என்று அரசினர் கருதுவார்களேயாயின், அதனால் உண்மையை மறைத்துவிட இயலாது என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

ஒன்றே செய்க; அதனை நன்றே செய்க என்பதைக் குறிக்கோளாகக்கொள்ளல் வேண்டும். நன்று செய்யாத எதுவும் பாழே: பொது மக்களின் பணத்தை வைத்து இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடும்போது விழிப்போடு இருத்தல் நல்லது.

நியாயவிலைக் கடைகளை அரசினர் அடிக்கடி திறந்து மூடவேண்டிய நிலைமையைவிட, என்றும் எங்கும் நியாயம் நிலைத்திருக்கச் செய்வதில் அரசினர் ஆர்வம் காட்டுதல் வேண்டும். அதுவே நல்லாட்சியின் அறிகுறி. அந்நிலைவரும் வரை நியாயவிலைக் கடைகள் நியாய நிலைக் கடைகளாக விளங்குமாறு செய்வார்களாக! ★

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

**உண்மையில் தென்னகத்துக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான தொகை ஏறத்தாழ 96 கோடி ரூபாயாகும். ஆனால், கிடைத்துள்ள தொகையோ 41 கோடியே 11 இலட்சம் — அதாவது கிடைக்கவேண்டிய பங்கில் ¼க்கும் குறைவானதேயாகும்!**

*நீர்ப்பாசன — மின் திட்டங்களிலேதான் இந்த அவல நிலை என்றால், இரும்பு எஃகு உற்பத்தியிலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.*

*இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்பு—எஃகு உற்பத்திக்கென ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.* **1000 கோடியாகும். இதில் தென்னகத்தின் பங்கு 6 கோடிதான். தென்னகத்துக்குக் கிடைக்க வேண்டிய தொகையில் 45ல் ஒரு பங்கேதான் கிடைத்திருக்கிறது. அதாவது, கிடைக்கவேண்டிய 280 கோடி ரூபாய்க்கு 6 கோடிதான் கிடைத்திருக்கிறது. (இதுவும் முழுவதாகக் கிடைத்ததாகத் தெரியவில்லை.)**

*இரயில்வேயை எடுத்துக் கொண்டு பார்த்தாலும், தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கும் உண்மையை உணர்ந்துகொள்ள முடியும்.*

*இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வே வளர்ச்சித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட* **மொத்த ரூபாய் 156 கோடியே 16 இலட்சம்.** *இதில் தென்னக மாநிலங்களுக்கெனக் கிடைத்த தொகை* **92 இலட்சம்தான்.**

**40 கோடி ரூபாயைப் பெறவேண்டிய தென்னக மாநிலங்கள் பெற்ற தொகை 92 இலட்சம்!**

*எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை ஏற்றத் தாழ்வை!*

*இலட்சக் கணக்கு இங்கே! அதுவும் பிச்சையிடுவதுபோல்!*

*கோடிக்கணக்கில் அங்கே! வாரி வழங்கிய பாரி நிலை!*

*தூத்துக்குடித் துறைமுகம் தூர்ந்தபடியே இருக்கிறது!*

*சேது சமுத்திரத் திட்டம் நீண்டு வாராற்று—திருப்பிப் பார்ப்பாரற்று இருக்கிறது!*

*ஆனால், வடக்கே, கண்டலா துறைமுகம் 20 கோடியிலே நிறுவப்படுகிறது! கலைந்த கற்பத்தைப் போல் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்தத் துறைமுகத்தைத் தூண் கொடுத்து நிமிர்த்துவதைப்போல் கோடி கோடியாக வெள்ளிக் காசுகளை அள்ளிவீசிப் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றனர்!*

*காவிரி எண்ணெய் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது! வடக்கே, எண்ணெய் இல்லாத இடங்களிலே ஆராய்ச்சி! காம்பேயில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்!*

*சேலத்து இரும்பும், அலுமினியமும் மண்ணுக்கடியிலே மக்கிக் கொண்டிருக்கின்றன!*

*வடக்கே, போபால்—துர்க்காபூர்—பொகாரோ போன்ற இடங்களிலே பெரும் பெரும் ஆலைகள் உருவாக்கப்படுகின்றன!*

*சோறு கிடைக்காதா? என்று ஏங்கிக் கிடக்கும் மக்கள் இங்கே!*

*உண்டசோறு செரித்திட ஜிஞ்சர் குடித்திடும் நிலையினர் அங்கே!*

*ஒரே இந்தியாவை உருவாக்க ஓய்வின்றிப் பேசுகின்றவர்களே! காந்திய சீடர்களே! கற்பனை இந்தியக் கனவு காணுவோரே ஏக இந்தியாவிலே—ஏன இந்த ஏற்றத் தாழ்வுகள்? ஏன் இந்த ஓரவஞ்சனை?*

*தெற்கு—வடக்கு என்பதெல்லாம் வெறும் வரட்டுவாதமென் கிறீர்களே! புள்ளி விவரங்கள் தரும் இந்தச் சான்றுகளைப் புரட்டித் தள்ள முடியுமா, உங்களால்?*

*வடக்கு—தெற்கு என்பது வெற்றுக் கூச்சலா? இப்போதாவது உண்மை உணர்ந்து திருந்துவீர்களா? நமது கண்டனம் பொருளற்றதல்ல என்பதையாவது உணர்வீர்களா?*

---

தலைமை நிலைய அறிக்கை (அ) 4/60

## தி. மு. க.

## தலைமைச் செயற்குழுக் கூட்டம்

*திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம்,* **6—11—60 ஞாயிறு மாலை 3-மணிக்கு, மதுரை நகரில், டாக்டர் ஏ. அருணசலம் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.**

*'அறிவகம்' சென்னை-13,*
*15—10—1960*

**கே. ஏ. மதியழகன்,**
**தலைமை நிலையச் செயலாளர்.**

---

தலைமை நிலைய அறிக்கை (அ) 5/60

# தொழிற்சங்க நிர்வாகிகட்கு

## வேண்டுகோள்

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், ஆதரவிலும் இயங்கிவரும் தொழிலாளர் முன்னேற்றக் கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் முதலிய பல்வேறு அமைப்புக்கள், தி. மு. க. தொழிற் சங்கச் செயலாளருடன் தொடர்புகொள்ள ஏதுவாகவும், தொழிற் சங்கப் பட்டியல் அமைக்கத் துணையாகவும் அந்தந்தத் தொழிற் சங்கத்தின் பெயர், ஊர், மாவட்டம், நிர்வாகிகள் விவரம், தேர்ந்தெடுக்கப்பட்ட காலம், தனியான சட்டதிட்டங்கள் அமைத்திருப்பின் அவற்றின்படி, ஆகிய விவரங்களை—உடனடியாக (30—10—60க்குள்) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பித்தரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*தொழிற் சங்கச் செயலாளர்,*
*தி. மு. க. தலைமை நிலையம்,*
*'அறிவகம்', சென்னை. 13*

**க. அன்பழகன்,**
**தொழிற் சங்கச் செயலாளர்.**

காஞ்சீபுரம்

23-10-60.

தம்பி!

கொல்லிமலைச் சாரலிலே, கொஞ்சும் சதங்கை ஒலி எழுப்பியபடி ஆடி வரும் அருவிக்கருகே, வழவழப்பான கற்குவியலின் மீதமர்ந்து, உன்னைத்தான் நினைத்துக் கொண்டேன். திருச்சி மாவட்டத்திலே பல்வேறு இடங்களுக்கு இந்தக் கிழமை அழைத்துச் செல்லப்பட்டேன்—ஒவ்வோர் நாளும் மூன்று நான்கு நிகழ்ச்சிகள். இப்படி இழுத்துச் செல்வதால், களைப்பும் சலிப்பும் எனக்கு ஏற்பட்டுவிடுமோ, மற்றப் பல நிகழ்ச்சிகளுக்கு ஒப்பம் அளித்திட மறுப்பேனோ என எனவோ, என்று எண்ணிக் கொண்டனர் போலும், அப்பில் தர்மலிங்கமும், அவருடன் இருந்து என்னை அகமகிழவைத்த, தோழர்கள் காமாட்சி, அழகமுத்து, முத்துக் கருப்பன், ஆகியோரும் சரி, அண்ணனுக்கு எதையாவது காட்டிக் களிப்பூட்டுவோம் என்று எண்ணிக்கொண்டு, மலைவளம் காண அழைத் தனர். கோடி கோடியாகக் கொட்டிச் செலவிட்டாலும், செய்துகாட்ட இயலாத காட்சியன்றோ, மலைவளம். அதிலும், தம்பி! தமிழகத்தின் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பினுக்கு உள்ள சான்றுகளிலே ஒன் றன்றோ, கொல்லிமலை! அந்த மலைச்சாரலில் அமைந்துள்ள புளியஞ்சோலை எனும் இடம் அழைத்துச் சென்றனர் — பகற்பொழுது முழுவதும் ஆங்கு தங்கி, உண்டு இளைப்பாறி, உரையாடி மகிழ்ந்து, மாலை நிகழ்ச்சிக்குச் சென்றிடுவது என்ற திட்டத்துடன்.

தம்பி! கொல்லிமலை, திருச்சி மாவட்டத்துக்கும் சேலம் மாவட்டத்துக்கும் நடுவே, இயற்கை அமைத்துள்ள எழில்மிகு திரை என்று கூறலாம். இப்புறத்தில் திருச்சி; அப்புறம் சென்றால் சேலம்—சேந்தமங்கலப் பகுதி! 'ஓஹோ! உனக்கு அப் படிக் கூறுவதைவிட, விளங்கத்தக்க விதத்தில் கூறவேண்டும்! அப்புறம், நமது இயக்க முதியவர், ஜி. பி. சோமசுந்தரம்!

கொல்லிமலையினின்றும், இரு மாவட்டங்களுக்கும் கீழ்நோக்கிச் செல்ல, ஒற்றையடிப் பாதைகள் உள்ளன. மலைபடு பொருள்களைச் சுமந்துகொண்டு, இரு மாவட்டங்களுக்கும் வருகின்றனர்.

நான் சென்ற அன்று, புளியஞ்சோலையிலே, சந்தை.

நெடுஞ்சாலைக்கருகே நடத்தப்படும் சந்தைகள் பலவற்றைக் கண்டதுண்டு; மலைச்சாரலிலே நடந்திடும் சந்தையை அன்றுதான் கண்டேன்.

கொல்லிமலையிலே விளைந்திடும் பலாவும் வாழையும், கொய்யாக்கனிகளும் பருப்பு வகைகளுமான பொருள்களை, மலைவாழ்மக்கள், சுமந்தபடி, ஒற்றையடிப்பாதை

# கொல்லிமலைச் சாரலிலே

வழியாக இறங்கிவந்தவண்ணம் இருந்தனர்; சாரை சாரையாக. மரத்தடிக்கு மரத்தடி, சிறு கடைகள் அமைத்துக்கொண்டு, மலை மக்களின் வருகைக்காகக் காத்திருந்தனர், சிறுகடை நடாத்தும் வணிகர்கள். இரைச்சல் குறைவு! இயற்கை அமைத்தளித்த எழிலோ மிகுதி! கட்டுடல் இருக்கிறது; மலைவாழ் மக்களிடம், ஆயினும், முகத்திலே கவலை தோய்ந்திருக்கக் கண்டேன். அவர்கள் மனதைக் குடைந்திடும் எண்ணம் யாதோ, அறிந்திட இயலவில்லை; ஆயினும், இயற்கையுடன் போராடி, காடுகளில் குடி இருந்துகொண்டு, காலமெல்லாம் கஷ்டப்படுகிறோமே, நல்ல பாதை, புதிய வாழ்வு, எப்போதுதான் கிடைத்திடுமோ, புத்தம் புதிய ஆட்சி வந்தது என்றனர், புல்லர்களின் கொட்டம் அழிந்தது என்றனர், எனினும், நமது வாழ்க்கையிலே மட்டும், எந்தப் புதிய மாற்றமும் ஏற்படக்காணோமே, என்று எண்ணி ஏக்கமடைகின்றனரோ, என்னவோ, யாரறிவர்.

*

மலைவாழ் மக்கள், தமிழைத்தான் பேசுகின்றனர்-தடுக்குமொழி! பெயர் கேட்டேன், ஒரு இளைஞனை—செல்லப்பன் என்றான். அழகிய பெயர்! தந்தையின் பெயர் வடமன் என்றான். பெண்கள், புடவையையே மேலாடைக்காகவும் பயன்படுத்திக்கொள்கின்றனர். தோற்றத்தால், அவர்கள், எவ்வகையிலும், நம்மில் வேறுபட்டவர்களாகத் தெரியவில்லை. மலை மீது, கானிடை வாழ்வதால், ஏற்படும், நடை உடை முறைகளிலே மட்டுமே, வேறுபாடுகள் தெரிந்தன.

கொய்யாக் கனிகளும் மலைவாழையும், பலாவும், மட்டுந்தானா, மலைபடு பொருள்கள் என்று கேட்டேன்-தம்பி! நான் கேட்டு மலைத்திடும் முறையில், மளமள வென்று மலைபடு பொருள்களின் பட்டியலைக்கூறினர்.

காப்பியும் மிளகும், கடுக்காயும் ஏலமும், சந்தனமும் மிளகும், ஆங்கு உண்டு என்றனர். இவை, வெறும் பொருள்களின் பெயர்ப்பட்டியலென்று, பொருளாதார நூலறிவு உடைய எவரும் கூறார். இவை யாவும், வெளிநாட்டினர் விரும்பிப்பெற்று, பொருளினை நமக்கு அளித்திட உதவும் செல்வப் பொருள்கள்! மேனாடுகள் பலவற்றினுக்கும், சுவையும் மணமும், இத்தகுபொருள்கள்மூலமே கிடைக்கின்றன.

செல்வப் பொருள்களை ஈந்திடும், கொல்லிமலையின் வளத்தைத் திட்டமிட்டுப் பெற்றிடத்தக்க ஏற்பாடுகளைத் துரைத்தனம் மேற்கொண்டு இருந்திருக்குமானால், எதெதற்கோ செலவிடும் தொகையிலே ஒரு சிறு அளவு இதற்கென ஒதுக்கிச் செலவிட்டு இருந்திருப்பின், கொல்லிமலையின் கொடைத்திறன், பன்மடங்கு அதிகமாகி இருக்கும்—திருச்சி மாவட்ட முழுவதும், இந்த மலைபடுபொருள் ஈட்டித்தரும் செல்வத்தைக் கொண்டே ஏற்றம் பெற்றிடக்கூட இயலும். இப்போது கொல்லிமலையிலே கிடைப்பவை, திட்டமிட்டுப் பெறப்படுபவை அல்ல. மலைபடுபொருள்வகை அறிந்த விற்பன்னர்கள், வளம் கண்டறிந்து, இங்கு தோட்டங்களை அமைத்தனரோ, எனின், இல்லை. பன்னெடுங் காலமாக இருந்துவரும் தருக்கள்! பாய்ந்தோடிவரும் அருவி! வழவழப்பாகிப்போன மலையிலுள்ள பாறைகள், உருளைக்கற்கள்! மரக்கிளைகளிலே மந்திகள்! இனிய பண் பல எழுப்பி, வட்டமிட்டுத் திரிந்திடும் புள்ளினங்கள்! சீறிடும் சிறுத்தைகளும், கிழங்கு அழித்திடும் காட்டுப் பன்றிகளும், சிறு நரிகளும் உண்டு! உச்சி செல்லச்செல்ல, காடிக் கூட்டமும் உண்டு என்கின்றனர். இவைகளுக்கு ஈடுகொடுத்துக்கொண்டு, வாழ்கின்றனர், மலை மக்கள்—தம்பி! அவர்கள் ஒட்டர்களும்கூட!! — அதாவது, அவர்களும், நம்மைப்போல் இந்நாட்டு மன்னர்!!

பெரும் பகுதி நிலத்திலே சாமை பயிரிடுகின்றனர்—அந்தச் சோறு, மல்லி நிறம்! வேறு நெல்வகையும் கூடப் பயிராகின்றது. எல்லாம், தக்கதிட்டமிட்டு அல்ல! பெரும்பாலானவை, தன்னிச்சையாகத் தழைக்கின்றன, "என் ஆற்றலின் அளவு அறியமாட்டீர்கள், அறிவிலிகாள்! நான் தரவல்ல யாவை என்பதை நீவிர், சிறிதளவு தெரிந்துகொள்ள மட்டுமே, இப் பொருள்களைக் காட்டி நிற்கிறேன்!" — என்று நம்மை நோக்கிக் கேலிசெய்வதுபோல, நிற்கிறது கொல்லிமலை. இங்கு வீழ்ந்தோடிவரும், அருவி நீரைத் தேக்கிப் பயன்மிகுதியாகப் பெற இயலும் என்று, பல ஆண்டுகளுக்கு முன்பே, பலரும் எடுத்துக் கூறினர்; நமது கழக மாநாட்டிலே தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்காகச் செலவிடப்படும் பணத்தின் அளவிற்குத் தக்க பலன், கிட்டாது என்று, நிபுணர்கள் செப்புவதாகக் கூறித் துயில்கொண்டனர் துரைத்தனத்தார்; மீண்டும் மீண்டும், அந்தப் பிரச்சினையைப் பலரும் எடுத்துப் பேசி வருவதால், இப்போது துரைத்தனத்தார், செயல்படத் துணிந்துள்ளனர் என்று அறிகிறேன். அதற்கு அறிகுறியாகத், தேக்கம், அணை போன்றவைகளை அமைத்திடும் துறையினர், ஆங்கு நடமாடுகின்றனர்—பாறைகளிலே இங்கும் அங்குமாக வெள்ளை நிறம் அடித்துவைத்துள்ளனர்--காண்போர், இந்தப் பக்கமாகத்தான் தேக்கம் — அணை என்று பேசிக்கொள்கின்றனர்.

தம்பி! துரைத்தனம், எந்தத்திட்டம் நடாத்துவதானாலும், செலவிடும் தொகைக்கு ஏற்பப், பலன் கிடைத்திடவேண்டும் என்று கருதித்தான் பணியாற்றவேண்டும். ஆனால், ஏதும் செய்யாதிருக்க

இந்த நோக்கத்தைச் சாக்காக்கிக்கொள்வதே, நமது துரைத்தனத்தின் போக்காகிவிட்டது. அதிலும் தென்னகத்தைப் பொறுத்தவரையிலே, புள்ளிவிவரப் புலிகள், எதையும் உடனடி, துணிந்து செய்திட இடமளிப்பது இல்லை.

கொல்லிமலை நீரைத் தேக்கிடச் செலவிடும் பணத்துக்குத்தக்க பலன் கிடைக்காது' என்று அச்சமூட்டுகின்றனர். இந்த அச்சம், வடக்கே, பெரும் அணைகள் கட்டப்படும்போது, 'குறுக்கே நிற்கிறதா! மறைந்த, இராஜபாளையம் குமாரசாமி ராஜா அவர்கள் கோவையிலே பேசியது நினைவிலே இருக்கிறதல்லவா?

> "வடக்கே அமைக்கப்பட்டுள்ள, தேக்கங்கள், அணைகள் ஆகியவற்றிலே செலவிடப்பட்டுள்ள தொகையிலே, மிகமிக விரயம் ஏற்பட்டிருக்கிறது."

என்றல்லவா, கவர்னராகப் பணியாற்றிய குமாரசாமி ராஜா அவர்கள் கூறினார்.

கொல்லிமலையை வளமாக்கத், தொகை ஒதுக்கச் சொன்னால், ஆயிரத்தெட்டு ஐயப்பாடுகளை அவிழ்த்து விடுகின்றனர்; ஆனால் வடக்கே, எத்தனை கோடிகளாயினும் கொட்டிடத் தயங்குவதில்லை.

பக்ரா—நங்கல் அணைக்குக் கிட்டத்தட்ட இருநூறு கோடி ரூபாய் செலவு. தட்டாமல் தயங்காமல் கொட்டிச் செலவிட்டனர். ஆனால் எதிர்பார்த்த பலன், கிடைத்ததா என்றால், நிபுணர்கள் திகைக்கின்றனர், அரசியல் தலைவர்கள் ஆயாசமடைகின்றனர், காங்கிரஸ் தலைவர்கள் கைபிசைந்து கொள்கின்றனர்.

என்னுடைய 'திருத்தலம்' என்று பக்ரா—நங்கலைக் குறிப்பிட்டுக் குதூகலமாகப் பேசினார், நேருபண்டிதர். வெளிநாட்டிலிருந்து எந்தத் தலைவர் வந்திடினும், அழைத்துச் சென்று காட்டுவது, இந்த பக்ரா—நங்கலைத்தான். எனினும் இப்போது நிபுணர்கள், பக்ரா—நங்கல் அணை, எவ்வளவு பரப்பு நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ, அவ்வளவுக்கும், கிடைக்காது என்று அறிவிக்கின்றனர்.

## நூற்றுக்கு முப்பது பங்கு குறைவாம்—எதிர்பார்த்த பலனில்.

மற்றும், ஆங்கு அமைக்கப்பட்டுள்ள தேக்கங்கள், அணைகள், பெருந்தொழில்கள் அனைத்திலுமே, ஏராள ஊழலும், நோக்கேடும், பொருள் நட்டமும், ஏற்றமெடுக்கும் அளவில் உள்ளன என்று, அவ்வப்போது நிபுணர்கள், ஆய்வுக் குழுவினர், அறிவிக்கின்றனர். எனினும், மேலும் பல புதிய திட்டங்களை மேற்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனரா எனில், இல்லை, இல்லை, என்பது பளிச்செனத் தெரிகிறது. பொக்காராவில் நாலாவது இரும்புத் தொழிற்சாலை அமைத்திடுவதிலே ஆர்வமும், சுறுசுறுப்பும், காட்டப்படுகிறது.

கொல்லிமலையோ, மகன் வரவுக்காக, சுவைமிகு உணவினைச் சமைத்து வைத்துவிட்டு, அது சில்லிட்டுப் போகும் நிலையிலும், மகன் வீடு வராதிருந்தால், ஏக்கத்துடன், வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும், தாய்போல, இருந்துவரக் காண்கிறேன்.

ஆயிரம் கோடியா! அட பேராசைக்காரா! என்ன செய்வாய் அவ்வளவு தொகையை வைத்துக்கொண்டு?—என்று என்னைக் கேட்கின்றனர், கேலி பேசுகின்றனர், அமைச்சர்கள். கோலேந்திகளே! கொல்லிமலையைப் பார்த்துவிட்டு, என்மீது கேலிக் கணைகளை ஏவுங்கள்! பழமுதிர் சோலையாக்கலாம் கொல்லிமலையை—சில கோடி ரூபாய், பயன்தரும் முறையிலே செலவிட்டால்! சந்தனக் காடு காணலாம்! அடவி அழகும், அருவி அழகும் காணச் செல்வோர், சிந்துபாடி மகிழ்ந்திடும் உல்லாசக் கூடமாக்கலாம்! வெளிநாட்டார் விரும்பி வாங்கிடும் காப்பி பயிரிடலாம், மிளகு பயிரிடலாம்! கொல்லிமலைத் திட்டம் என்று, மலைபடு பொருள் காணும் நிபுணர் குழுவினைத் திட்டம் தயாரித்து அளிக்கச் சொன்னால், இயலாது என்று கருதுகிறீர்கள்!—என்று கேட்கத் தோன்றுகிறது, அமைச்சர்களைப் பார்த்து! அவர்கள், தம்பி! இந்த ஏழையின் பேச்சையா ஏற்பார்கள்!! அதனால்தான், உன்னிடம் கூறுகிறேன், ஊராருக்கு நீ உரைத்திடுவாய் என்ற நம்பிக்கையில்.

முன்பொருமுறை, தம்பி! கழுதைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகிறது என்பது குறித்துக் கவலைப்பட்டுப் பேசினார், அமைச்சர் பக்தவத்சலம்! ஆமாம், தம்பி! வேடிக்கை, அல்ல! ஏழை பங்காளர் அல்லவா காங்கிரஸ் அமைச்சர்; ஆதலால், ஏழைக்குப் பொதிசுமக்க, மலிவானது, கழுதைதானே! அதனால், அமைச்சருக்கு அந்தக் கவலை ஏற்பட்டது. கழுதைகளை வளர்க்கவேண்டும் என்றார். அதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதோ இல்லையோ, நானறியேன்—ஆனால் கழுதைகள் விஷயமாக ஏற்படும் அக்கறையிலே ஒரு சிறு அளவாகிலும், காடுவளர்த்திட வேண்டும்என்பதிலே, அமைச்சர் பக்தவத்சலனாருக்கு ஏற்படவேண்டுமல்லவா! தேவிகுளம் பீர்மேடு இழந்தோம், காட்டுவளம் கெட்டுவிட்டது, தமிழகத்துக்கு. கொல்லிமலை, பச்சைமலை, ஜவ்வாதுமலை, சேர்வராயன் மலை, ஏலகிரி, என்பன போன்ற மலைகளையாகிலும், இந்த நோக்கத்துடன் கவனித்துத் திட்டமிட்டுக் காரியமாற்ற வேண்டாமா! எங்கே செய்கின்றனர்? எப்படிச் செய்ய இயலும்? அவர்கள்தான், ஆயிரம்கோடி

கிடைத்தால், செலவிடமுடியாது என்ற அதி அற்புதமான பொருளாதார அறிவு பெற்றவர்களாக இருக்கிறார்களே! இவர்கள் ஆட்சியிலே, கொல்லிமலை இருந்தென்ன, குடகுமலை கிடைத்திதென்ன? ஊமை கண்ட கனவுதானே!

முகிலைத் தொட்டிழுத்து முத்தமிடும் குன்றுகள் உள்ளன — அந்தக் குன்றுகளிலே இயற்கைவளம் கொஞ்சிவிளையாடுகிறது — எனினும், அது திருமாலுக்கா, அவன் மருகனுக்கா என்று மல்லுக்கு நிற்கின்றனர், மேதைகள்! அதனைத் தீர்த்துவைக்க மன்றம் அமைத்துத்தருகிறது துரைத்தனம்.

அந்தக் குன்றுகளும், ஆங்கு தழைத்துக்கிடந்திடும் காடுகளும், எத்தகைய செல்வங்களை ஈந்திடத் தக்கவை என்பது குறித்து எவர், அக்கரை காட்டுகின்றனர்? அங்கு எங்காவது, ஆமை ஓட்டிற்குள்ளே அங்கத்தைச் சுருட்டிவைத்துக்கொண்டு, ஒரு மகான் இருக்கிறார் என்று எவனாவது கதைகட்டிவிடுவானேல், கூடம் பழத்துடன், கும்பல் கும்பலாகச் செல்வர், கும்பிட்டுக் கூத்தாட! சந்தனமும் மிளகும், காப்பியும் தேயிலையும், பலாவும் முந்திரியும், தேக்கும் அகிலும், தினையும் தேனும், நிரம்பப் பெறலாமே அத்தகைய இடங்களில் என்று எங்கே எண்ணம் பிறக்கிறது. அமெரிக்கா, பால் பவுடர் தரவேண்டும், பிரான்சு பழரசம் அனுப்பவேண்டும், டென்மார்க் பாலேடு கொடுக்கவேண்டும், என்று, பிச்சைப் பாத்திரம் ஏந்திக்கொண்டு செல்வதற்காகத், தூதுவர்களை எட்டுத்திக்கும் அனுப்பிவைக்கிறார்கள்—மலைவளம் பெருக்கிட, காட்டுவளம் கண்டிட, ஆங்காங்கு என்னென்ன முறைகளைக் கையாண்டு வருகின்றனர், அம்முறைகளிலே, எவை நமக்கு ஏற்றவை, என்பன பற்றி அறிந்துவர, என்ன திட்டம் அமுலில் இருக்கிறது?

தம்பி! கொல்லிமலைச் சாரலில் உட்கார்ந்து, கொய்யாக்கனியைக் கடித்துத் தின்றபடி, இவ்விதமெல்லாம் எண்ணிக்கொண்டேன். இந்த மலைகளெல்லாம், அந்த நாட்களில், 'அரண்கள்' என்றல்லவா, கருதப்பட்டன—கொள்ளப்பட்டன. முடியுடை மூவேந்தர்களின் பிடி தளர்ந்த பிறகு, பாரியும் ஓரியும், பேகனும் குமணனும், காரியும் மலை அரண்களிலன்றோ அமர்ந்து அரசோச்சி, அருந்தமிழ் காத்தனர். வல்வில் ஓரி! என்று புலவர் கூறிய சொற்றொடரை உச்சரிக்கும்போதே, நாணேற்றும்போது எழும் ஓசையேயன்றோ, செவியில் வீழ்கின்றது. அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்! என்று முதிரமலையாண்ட குமணன் கூறியது நினைவிற்கு வரும்போது, நெஞ்சம் எப்படியெல்லாம் நெகிழ்கிறது.

அந்த மலைகளெல்லாம் இன்று, புதரும் பொந்தும், உள்ள வெற்று இடங்களாகிப் போயினவே—சோற்றுக்கு வழி காணு மக்கள், கடல் கடந்தன்றோ செல்கின்றனர், காடு திருத்திக் கழனியாக்க—இதோ உள்ளனவே வளமளிக்கும் மலைகள், செல்வப் பொருளளிக்கும் காடுகள்—இவைகளைத் தக்க விதத்தில் பயன்படுத்தத் திட்டமிட்டால், வேற்று நாடுகளிலே கூலிகளாகிக் கொடுமையில் உழலும் நம் உடன் பிறந்தார், உழைத்துப் பிழைக்கலாமே, தாயகத்தில்! ஏனோ துரைத்தனத்தார்க்கு தினையளவும் இந்த எண்ணம் ஏற்படவில்லை.

காடுபடு பொருட்களை மட்டுமே நம்பி உள்ளன, இதுபோது விடுதலை பெற்றுத் திகழும், ஆப்பிரிக்க பூபாக நாடுகளிலே சில; இன்று இந்தியத் துணை கண்டத்துப் பிரதமரால் வரவேற்கப்படும் நிலைமைப் பெற்றுள்ள இன்க்ருமா என்பவர் அரசோச்சும் கனு நாட்டிலே, செல்வம் தருவதே, காட்டுப் பயிர் என்று கருதப்படும், கோக்கோ செடிதானே!

நமது மலைகளிலே, எத்தனை எத்தனையோ வகையான மூலிகைகள், உள்ளன—இன்று மலைப்பாம்புகளும் அவைகளைத் துரத்தித் தடிகொண்டு தாக்கும் வேட்டையாடுவோரும் இந்த மூலிகைகள் படர்ந்து கிடக்கும் இடங்களை அறிவர். இவைகளைக் கண்டறிந்து, வகைப்படுத்தி, பயன்படுத்தினால், பெரும் பொருள் ஈட்ட இயலும் என்கின்றனர் அறிந்தோர். இங்கோ மூலிகைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன; நாமோ பெரும் பொருளைக் கொடுத்து இது போன்ற மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்படும், வெளிநாட்டு மருந்து வகைகளை விலை கொடுத்து வாங்குகிறோம்.

•

அமைச்சர்களும், ஆளும் கட்சியினரும், சென்ற கிழமை, 'வனவிலங்குகள் வாரம்' நடத்தினர். வன விலங்குகளைக் கூண்டில் அடைத்து, கூண்டுகளை வண்டிகளில் ஏற்றி, உலா நடத்திக் காட்டினர். சிறுவர்கள் களிப்புற்றிருப்பர். ஆனால், இந்த 'வாரம்' நடத்துவதிலே ஏதேனும் பொருள் இருக்குமானால், காட்டு வளத்தைப் பெருக்குவது எப்படி என்பது பற்றி அக்கரை காட்டுவதாகத்தானே இருக்கவேண்டும். கொல்லிமலையும் பச்சைமலையும், வேறு பல குன்றுகளும் கவனிப்பாரற்றுக் கிடக்கும்போது, கூண்டிலிட்டு, மிருகங்களைச் சிறார்களுக்குக் காட்டி, விழா நடத்துவது கேலிக்கூத்தன்றி வேறென்னவாக இருக்கமுடியும்.

தம்பி! முந்திரி பயிரிடவேண்டும் என்று நாம் கூறியபோது கேலி பேசியவர்கள்தானே ஆளவந்தார்

கள். இப்போது? முந்திரிக் காடுகளை வளர்த்து வருகிறோம் என்று அவர்களே பெருமையுடன் பேசிக்கொள்கின்றனர். அதுபோலவே, மலைவளம், காட்டுவளம் ஆகியவற்றைப் பெருக்கவேண்டும் என்று இன்று நாம் கூறும்போது கேலி தான் செய்வர். என்றாலும், இன்றில்லாவிட்டால், மற்றோர் நாள், மலைவளமும் காட்டு வளமும் ஒரு நாட்டுக்கு மிகமிகத் தேவைப்படுவதாகும் என்று உணரத்தான் போகிறார்கள்.

•

கொல்லிமலைச் சாரலிலே அமர்ந்திருந்தபோது, தோன்றிய எண்ணங்களைத் தொகுத்து எழுதும்போது, தம்பி! வேறோர் யோசனையும் எனக்கு எழத்தான் செய்கிறது.


தேரும் திருவிழாவும் காணவும், ஊரூர் சென்று இடிபட்டு மிதிபட்டு, அறிவிழந்து, கண்ட கண்ட காதகர் காலடியெல்லாம் வீழ்ந்து வணங்கும் போக்கினராக உள்ள, நமது மக்கள், ஓய்வு நாட்களை, கொல்லிமலை போன்ற இடங்களைச் சென்று காண்பதற்குச் செலவிட்டால், மனத் தூய்மையும், தெம்பும் ஏற்படுமல்லவா! எங்கே செல்கிறார்கள்! கானிடை சென்று தங்கி இருக்கும்போது, ஆங்கு வீசும் காற்றுமன்றோ கானமாகி வருகிறது!

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்தாரே, ரூசுவெல்ட். அவருக்கு ஒரு பழக்கமாம்—பொழுது புலரும் வேளையிலே, புள்ளினங்கள் மிகுந்துள்ள சிறு கானிடை சென்று தங்குவாராம் — ஒவ்வோர் வகையான புள்ளினமும் ஒவ்வோர் வகையான பண் எழுப்புமன்றோ! அந்தப் பண்ணினைக் கேட்பதிலே, அவருக்குத் தனிச் சுவையாம். பண்ணின் வகையினைக்கேட்டு, இது இன்ன புள்ளினத்தின் பண் என்று கூறுவாராம்.

இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை இருக்கிறது; அந்தச் சுவை உள்ளத்துக்குத் தூய்மையும் தரவல்லது என்பதை, மலைவளம், கானின் கவர்ச்சி ஆகியவற்றினைக் காணும்போது, நிச்சயமாக உணரமுடிகிறது.

உயர்ந்து விளங்கிய கொல்லிமலையையும், உருண்டோடிவரும் அருவியையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டே, நான், என்னுடன் வந்திருந்த நண்பர் முல்லை சத்தியை உற்று உற்றுப் பார்த்தேன். என் பார்வையின் பொருளை அவர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. மணமாகாதவர்! முல்லைக்கு மணமானதும், துணைவியுடன் வந்து, காணவேண்டிய காட்சி. மோட்டார் சத்தம் காதைத் துளைத்திட, ஆலைச் சங்குகள் அலறி அலறி அலுப்பைத் தந்திட, பேரிரைச்சலை எழுப்பிடும், பெரிய நகரமல்ல; கண்ணுக்குத் தெரியாமல் இருந்துகொண்டே கானம் எழுப்பி மகிழ்விக்கும் புள்ளினங்கள் நிரம்பிப், புனலாடிப் புதுத் தெம்பு பெற்றிடத்தக்கதான சூழ்நிலை அழகுற அமைந்துள்ள, கொல்லிமலைச் சாரலன்றோ, என்று எண்ணிக்கொண்டேன். இயற்கையின் அன்பழைப்பாகவே, காற்றினால் அசைவு பெறும் செடியும் கொடியும், எனக்குத் தென்பட்டன. நந்தமிழ் மக்களும், தம்பி! வாழ்விழந்து தவிக்கும் இந்நாளில் அல்ல, மாற்றார்முன் மண்டியிடாது வாழ்ந்துவந்த நாட்களிலே, இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை பெற்றிருந்தனர். புலவர் பெருமக்கள் அன்று எழுதிய சொல்லோவியம் அத்தனையும், இன்றும், கூர்ந்து பார்த்திடும், எவருக்கும், இயற்கை சமைத்தளிக்கும் வடிவழகின் விளைவு என்பதும் விளங்கும். ஒரு பகற்பொழுது மட்டுமே கிடைத்தது, எனக்கு அந்த வாய்ப்பு. இதோ, வெளியே இருக்கிறார், அம்பில், அரியலூர் அழைத்துச்செல்ல. சென்று வருகிறேன்.

அண்ணன்,



# கவிஞன் கதை

"அம்மா! நீ சொல்வது எனக்குப் புரிகின்றது! வறுமை வாட்டுகின்றது! ஏழ்மை தாழ்த்துகின்றது! பொறாமை துரத்துகின்றது! இந்நிலையில் உனக்குப் படிப்பு எதற்கடா? என்று நீ கேட்கின்றாய்! உண்மைதான்! உணர்கின்றேன்!

ஆனாலும் இன்றைய உலகிலே! இந்த இருபதாம் நூற்றாண்டிலே! ஒருவன் மற்றவனால் மதிக்கப்பட வேண்டுமானாலும் கல்வி! மற்றவனை அவமதிக்க வேண்டுமானாலும் கல்வி!! மற்றவனால் புகழப்படவேண்டுமானாலும் கல்வி! மற்றவனை இகழவேண்டுமானாலும் கல்வி!! மற்றவனால் தன் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டுமானாலும் கல்வி! மற்றவனது வாழ்க்கையை வீழ்த்தவேண்டுமானாலும் கல்வி!! ம்ற்றவனால் மிடுக்காகத் திரியவேண்டுமானாலும் கல்வி! மற்றவனைக் கெடுக்கவேண்டுமானாலும் கல்வி!! எதற்கு வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் கல்வி! கல்வி!! கல்வி!!! என்பதை நீ உணர்கின்றாய். உன்னிப்பாக உணர்கின்றாய். உணர்ந்தும் படிக்கவேண்டாமென்று தடுக்கின்றாய் என்னை! இதற்குக்காரணம் என்ன? மடமையின் கொடுமையா? அல்ல! அல்ல! வறுமையின் கொடுமை! அடுத்து எத்தனையோ பெரிய பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் படிக்காமல் இருக்கின்றனர். படிக்கவைப்பதுமில்லை! படிப்பதுமில்லை!! ஆனால் இவள்மட்டும் தன் ஒரே மகனை வறுமையில் வாடியும் பணமின்மையால் குணமிழந்த நிலைமையிலும் படிக்கவைத்தாள்.

அம்மா! அவர்கள் நல்லவராயின் நகையாடார்! கற்றவராயின் தூற்றார் போற்றுவர்!! பாவம்! கல்லாதவர்கள்! கல்வியின் பயனைப் பெறாதவர்கள்!! கல்வியின் பெருமையை உணராதவர்கள்!! கல்வியின் புகழைப்பற்றிப் புரியாதவர்கள்! கல்வி ஒருவனுக்கு எத்துணை நற்றுணையாகும் என்பதை அறியாதவர்கள்! பணமுடையவர்கள்! குணமில்லாதவர்கள்! பணத்தால் குணத்தையும் பண்பையும் பெற்றுவிடும் பச்சோந்திகள்! பணமே குணமென எண்ணும் ஏமாளிகள்!! பணத்தைப் பூட்டிவைத்து அழகுபார்க்கும் எத்தர்கள்!! இவர்கள் இன்னும் சிறிதுகாலம்வரை — கல்வியின் சீர்மையை, மக்கள் உணரும்

**தமிழ்மொழியான்**

காலம் வரும்வரை — ஒருவனைப் பணத்தினைக்கொண்டு மதிப்பிடுவதில்லை, அவன் படித்த படிப்பினைக் கொண்டு மதிப்பிடுவது என்ற காலம் வரும்வரை, நகையாடலை தமது விளையாட்டாகக்கொள்வர். பின்னர் கற்றவனைப் போற்றுவதும் புகழ்வதுமே தமதுவிளையாட்டாகக் கொள்வர் என்பதையும் நீ உணர்கின்றாய்! உள்ளொளி பெறுகின்றாய்! ஆயினும் அவர்களது நகையாடலை ஒரு பொருட்டாக நினைந்து நாளும் நலிகின்றாய்! கவலைகொள்கின்றாய்!! கண் கலங்குகின்றாய்! கண்ணீர் வடிக்கின்றாய்!! அதை மறைக்க முயல்கின்றாய்! வெற்றியும் காண்கின்றாய்!!

எனது அருமை அன்னையே! சிறிது இருந்த நிலத்தையும்விற்று என்னைப் படிக்கவைத்தாய்! பண்புகளைப் பெறவைத்தாய்!! அதுமட்டுமா? நாள் பூராவும் கூலிவேலை செய்தாய்! கூழ்குடித்தாய்!! அதுவும் வயிறு நிறையும் மட்டுமல்ல! வாய் நிறையும்மட்டும்!! கயிறு பிடித்துத் தண்ணீர் இறைத்தாய்! கவலை அடைந்தாய்!! ஒரு கவளச் சோறுகூட இல்லாது இன்னலடைந்தாய்!! கண்ணீர் வடித்தாய்! இல்லை! இல்லை!! செந்நீர்வடித்தாய்!! உடம்பை உருக்கி உழைத்தாய்! உருக்குலைந்தாய்!! நெற்றி வேர்வை சிந்தினாய்! நெறியற்ற வார்த்தை கேட்டு மனம் நொந்தாய்!! மாற்றாரால் கொடுமைப்பட்டாய்! அடிமைப்பட்டாய்!! ஐயோ! அம்மா! உனது வாழ்க்கையிலே எத்தனை துன்பம்! எவ்வளவு கொடுமை! அத்தனையும் அடைந்தாய்! நான்படிக்கவேண்டும், பண்புகளைப் பெறவேண்டும் என்ற ஒரே நோக்குடன்.

நானும் படித்தேன்! படிக்க வேண்டியவைகளைப் படித்தேன்! பண்புகளைப் பெற்றேன்!! ஆனால், உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பிலே தோற்றேன்!! இதைக்கண்டு மனவேதனை அடைவாய் என எண்ணினேன். அதற்குப் பதில் நீ அடைந்தது மனமகிழ்வுதான். காரணம்? வெற்றி பெற்றவனிடம் மட்டும் படிப்பும் பண்பும் இல்லை. தோற்றவனிடமும் அது உண்டு என்பதை நீ உணர்வதுதான்.

ஆனால் இதை மற்றவர்கள் உணர மறந்துவிடுகின்றனர். ஏன்? நமது அரசே அறிய மறந்துவிடுகின்றதே!

"அம்மா! உனது வாழ்க்கையைத் துன்ப நிலமாக்கித் துயர் மழை பெய்வித்த எனக்கு மன்னிப்புண்டா? சொல்லுங்கள் — அம்மா

"சொல்லுங்கள்!" எனத் தாயிடம் தனயன் கூறிக் கதறியழுகின்றான்! கண்ணீர் வடிக்கின்றான்!!

அன்னை அணைக்கின்றாள்! கலங்குகின்றாள்! கண்ணீர்பெருக்குகின்றாள்!! மகனின் மனதை உணர்கின்றாள்! அவனை ஆற்றுகின்றாள்! தேற்றுகின்றாள்!!

அவன் படுக்கைக்குச் செல்கின்றான்; படுக்கின்றான். தூக்கம் வரவில்லை! துக்கம்தான் வந்தது! அமைதியைத் தேடிச் சோலைப் பக்கம் நாடுகின்றான்!!

அங்கே! பூத்துக்குலுங்கும் பூக்கள்! பூரித்துக்கிடக்கும் பழங்கள்! அருவியின் அழகு! குருவியின் குரல்! சந்தனத்தின் செம்மணம்! கீதமதியின் ஒளி! குயிலின் கூவல்! மயிலின் ஆடல்! மேகத்தின் ஒலி! மூங்கிலின் இன்னிசை!! இத்தனையும் அவன் மன அமைதிக்கு மருந்தூட்டிச் சிந்தனைக்கு விருந்தூட்டும் தெவிட்டாத் தேனாகின்றது! தீஞ்சுவைக் கரும்பாகின்றது!!

சிறகு விரித்திட்ட பறவையாகிறது அவன் சிந்தனை! சிந்தனை செயல்படுகின்றது! சிறந்ததொரு கருத்தைக்கொண்ட கதைகளையும் காவியங்களையும் படைக்கின்றது. இல்லத்திற்குச் செல்கின்றான்! வெல்லத்தினுமினிய சொற்களைச் சேர்த்து எழுதுகின்றான்! இப்படி நாட்கள் பல இறந்தன! கதைகள் பல எழுந்தன! காவியங்கள் பல உருவாகின!!

ஒரு நாள் மாலை நேரத்தில் அதே இடத்தில் அருவியின் அருகில் அமர்ந்திருக்கின்றான். அவனது கரத்திலே எழுதுகோலும் காகிதமும் காணப்பட்டன. வெள்ளித் தட்டில் தங்கத்தகட்டினைப் பதித்தாற்போன்ற பரப்பினை வானில் காண்கின்றான். அத்தகட்டின் மஞ்சள் ஒளி அருவி நீரைப் பொன்னிறமாக்கியது. அது தண்ணீரா? அல்ல! அல்ல!! தங்கக் கட்டிகளை உருக்கிவார்த்த தங்கத் தண்ணீர்! சோலையின் பசுமையை மஞ்சளாக்கியது! அது சோலையா? அல்ல! அல்ல!! பொற்கட்டிகளால் உருக்கிவார்த்த பொற்சோலை! வானில் பறவைகள் இணை இணையாகப் பறந்துகொண்டிருந்தன! அவற்றின் சிறகுகள் மின்னின! தென்றல் மெல்ல வீசியது! நறுமண நாற்றம் திக்கெட்டும் பரவியது! அத்துடன் அவன் சிந்தனையும் சிங்காரச் சிறகுகளை விரித்து செயலாற்றத் தொடங்கியது! காகிதத்திலே கற்பனைக் கருத்துக்களைக் கன்னித் தமிழில் வடித்தான். அதுபோது அவ்விடம் நோக்கி ஒருவன் வந்தான்.

"அமைதியைத் தேடி அருவியை நாடிவரும் ஒவ்வொரு சிந்தனையாளனும் அறிஞனாகின்றான். அறிஞன் அறிஞனைச் சேர்வது. இயற்கையின் இரகசியம்" என்பது ஏற்பாடு. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை புரிந்தனர்! நாள்தோறும் அங்கே அவர்கள் சந்தித்தனர்!! புன்னகை,பழக்கத்திற்குக்கொண்டு வந்தது! பழக்கம் நட்பாகியது! நட்பு அவர்களைப் பிணைத்தது!!

இதுபோல் நாட்கள் பல பறந்தன. தாய் தனயனது திறமையைக் கண்டு களிக்கின்றாள்! எல்லையில்லா இன்பத்தில் திளைக்கின்றாள்! உள்ளம் உவகையடைகிறது! உடல் பூரிக்கின்றது!!

கவிஞன் தான் வடித்த கவிதைகளை, கதைகளை பத்திரிகைகளுக்கு அனுப்புகின்றான். பத்திரிகைகளையும் பதிலையும் பார்த்துப் பார்த்து ஏமாற்றமடைகின்றான்.

அவனது கதைகளை வெளியிடும் பத்திரிகைகள் ஒன்றுகூட இல்லை. பணக்காரர்களும்பதவியாளர்களும் எழுதிய கதைகளைத்தானே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. சிறந்த கருத்துக்களையும் பரந்த நோக்கங்களையும்கொண்டிலங்கும் கதைகளை வெளியிடுவதுதான் இல்லையே! இப்படி இருக்க, இந்தக் கவிஞன் கதை மட்டும் எப்படி வெளியாகும்? அது, இவனுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

பத்திரிகைகளின் நிலைமையை நினைந்து உளம் நைந்தான்! கவலையடைந்தான்!! கண்ணீர்விட்டான்!! மன வேதனையிலே வாடினான்! வேதனை அவனை ஆட்கொண்டது!

> நம் நாட்டில் கண்ட கண்ட இடத்திலெல்லாம் செத்துப் போன கொள்கைகள் நிறைந்து கிடக்கின்றன. செத்துப்போன இந்தக் கொள்கைகளை உடனே புதைக்கவேண்டும். இல்லாவிட்டால் இவற்றின் துர்நாற்றத்தால் சமுகம் முழுவதும் அழுகிப் போய்விடும்.

உடல் நலிந்தது! உள்ளம் குலைந்தது!! வேதனை அவனது இறுதி மூச்சுக்குச் சாதனை தரும் மருந்தாகியது! தனயனது பிரிவைத் தாளாது கவிஞனின் தாயும் கவிஞன் நிலையானாள்!!

நண்பன், கவிஞனை அருவியிலே காணாது கலங்குகின்றான். இறுதியில் கவிஞன் சொல்லிய குறிப்புகளைக்கொண்டு கவிஞனது குடிலைக் காண்கின்றான். இல்லத்தின் ஒரு மூலையிலே! பூச்சி புழுக்கள் அரித்தும், மழையில் நனைந்தும், காற்றில கலைந்தும் சிதைந்தும் குப்பைபோல் கத்தை கத்தையாகக் குவிந்து கிடந்தன காகிதங்கள். அவைகளை எடுத்துப் பார்த்தான்! மகிழ்ந்தான்! புத்துணர்வு பூண்டான்! புது வழியில் புகுந்தான்!! அவைகளனைத்தையும் எடுத்தான். தன் இல்லத்திற்குச் சென்றான். எண்ணமும் எழுச்சியும் தீவிரமாக எழுந்துகின்றது. சிதைந்த காகிதங்களை வரிசைப்படுத்தினான்! அவைகளை ஒன்று சேர்த்தான்! எழுத்துக்கள் அழிந்த இடங்களில் எழுத்துக்களைப் புகுத்தினான்! வரிகள் மறைந்த இடங்களில் வரிகளை வரைந்தான்! அதன் பிரதி ஒன்றை எடுத்தான்! அதில் ஆசிரியன் இளங்கோ என்று அக்கவிஞனது பெயரைப் பொறித்தான்!! பத்திரிகைக்கு அனுப்பினான்.

அதை ஒரு பத்திரிகை வெளியிட்டது. பிரதிகள் ஏராளமாக விற்பனையானது! மக்கள் விரும்பி வாங்கினர்! பிரதிகள் கிடைக்காது மக்கள் தவித்தனர்! எங்கும் ஒரே பரபரப்பு! ஆசிரியர் இளங்கோ என்றே பேச்சு!

இதைக் கண்ட பத்திரிகைகள் பலவற்றையும் கவிஞனின் மற்றக் கதைகளையும் காவியங்களையும் வெளியிட்டன.

அறிஞன் என்றறைந்தது ஒரு பத்திரிகை! கவிஞன் என்று கூறி களித்தது மற்றொரு பத்திரிகை!! நாவலன் என்று கவிஞர் ஒருவர்! பாவலன் என்று புகழ்ந்தார் மற்றொருவர்!! தமிழ் மேதை என்றது ஒன்று! தமிழ்க் காவலன் என்றது மற்றொன்று! இப்படி பத்திரிகைகளும் உலகமும் புகழ்ந்தன கவிஞனை. எப்போது? இருக்கும்போதல்ல! இறந்த பிறகு!!

பத்திரிகை நிருபர்களும் அறிஞர்களும் கவிஞனின் குடிலுக்குச் சென்றனர். அங்கு அவனைக் கண்டாரில்லை!


எப்படிக் காணமுடியும் கவிஞனை அங்கு? பத்திரிகை உலகம்தான் அவன் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டதே! பாழ்படுத்தியதோடு மட்டுமல்லாது, உடலை மண்ணுக்கு உரமாக்கிவிட்டதே! உலகப் புகழுக்கு உலைவைத்துவிட்டதே!! பிறகு கானகத்திற்குச் சென்றனர்! புதையுண்ட இடத்தைக் கண்டனர்! கவிஞனுக்கு மண்டியிட்டு வணக்கம் புரிந்தனர்! வாழ்த்தினர்!! கவிஞன் புதையுண்ட இடத்தில் பொன்மாளிகை ஒன்றை எழுப்பினர்! பூத்துக் குலுங்கும் சோலையையும் உண்டாக்கினர்!!

மாளிகையின் முன்பு கவிஞன் காசினியைக் கண்டு களிப்பது போல் கவிஞனது பொற்சிலை ஒன்றை அமைத்தனர்! கவிஞனது சிலைக்கு பக்கத்தே அவரது தாயின் சிலை ஒன்றைச் செதுக்கி வைத்தனர்!

இவ்வாறு பத்திரிகைகளும் பண்பாடற்ற மனிதர்களும் கவிஞன் இறந்தபிறகு அவனுக்குப் பொன்னாலும் தங்கத்தாலும் உருவமெடுத்தனர்! வழிபட்டனர்!

ஆனால் அவன் இருக்கும்போது தாழ்த்தினர்! தூற்றினர்! உலகை விட்டே துரத்தினர்!!

"அதுபோன்ற கவிஞர்கள் — இளம் எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் இருக்குமிடம் அறியப்படாது பத்திரிகைகளால் — உலகால் — உலுத்தர்களால் மறைக்கப்படுகின்றனர். அக்கவிஞர்களது கருத்துக்களைப் பத்திரிகை உலகம் வெளியாக்க முனைவது எப்போது? அவர்களுக்கு ஊக்கம் ஊட்டுவது எப்போது? ஆக்கம் தருவது எப்போது? எப்போது? எப்போது?" என்ற கேள்விகளைத் தொடர்ந்து தொடர்ந்து கேட்டபடி உலகைக் கண்டு சிரிக்கின்றது கவிஞனின் சிலை!



# மகாரியாஸ் மனப்பான்மை

—[வை. மணியன்]—

சின்னஞ்சிறு நாடுகள் முதல் வல்லரசுகள் எனப்படும் நாடுகள் வரை உள்ள எல்லா உலக நாடுகளையும் அவற்றின் தலைவர்களையும் எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், "எவ்வளவு வேற்றுமை, இவ்வுலகில்" என எண்ணத் தோன்றும். ஆவேசமாகப் பேசும் குருஷேவ் — "என்னுடைய நாடு யாரையும் நத்திப் பிழைக்கும் நிலையில் இல்லை; இதை அறியவேண்டும் ஐசனோவர்" என்று ஐ. நா. மன்றத்தில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார். "இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் அமெரிக்கா பயந்துவிடாது" என்று வேகமாகப் பேசும் ஐசனோவர், இருவரையும் சாந்தப்படுத்தும் முறையில் பேசும் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன், 'இவ்விருவர் மட்டுமென்ன, அகிலமே அமைதி வடிவு ஆக வேண்டும்' என அக்கறை காட்டும் இந்திய துணைக்கண்டத்துப் பிரதமர் நேரு...... இப்படி உலகத் தலைவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். ஆனால் அவர்களது வாழ்க்கை வரலாறுகளும் போகிற போக்குகளும் சுவை தருவன; பாடம் புகட்டுவன.

இந்தோசீனத்தில் வதியும் பிரதமர் ஒருவர், எளியவாழ்க்கை நடத்துபவர்; பெயர், ஹோ-சி-மின். இவர் தனது ஆரம்ப வாழ்க்கையில் சமையல்காரராகப் பணியாற்றினாராம். பிறகு படிப்படியாக உயர்ந்து உன்னத நிலையை அடைந்து, இன்று பிரதமராக இருப்பவர். எளிய வாழ்க்கை, தூய்மையான சிந்தனை, தொண்டு மனப்பான்மை ஆகியவையே ஹோ-சி-மின் என்று அறிஞர்கள் பலரும் அவரைப் புகழ்கின்றனர். மேலும், அவர் தனக்கு வேண்டிய தேவைகளுக்கு மட்டுமே அரசாங்கத்திலிருந்து பணம் பெறுகிறார். தனக்கு உரிய தொகையாகத் தரப்படவேண்டிய முழுச் சம்பளத்தில் பெரும் பகுதியைத் 'தேவையில்லை' என்று கூறிவிட்டுத் தேவையான தொகையை மட்டுமே பெற்றுக் கொண்டு எளிய வாழ்வு வாழ்கிறார். "எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை" என்பார்கள். அதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

அவரையும் மிஞ்சக்கூடிய அளவில், சைப்ரஸ் நாட்டின் ஈடில்லாத் தலைவர், சைப்ரஸ் நாடு ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுபடப் போராடியவர், சிறை சென்றவர், நாடு கடத்தப்பட்டவர், இறுதியில் சைப்ரஸ் நாடு விடுதலை அடையச் செய்தவர், சுதந்திர சைப்ரஸின் இன்றைய அதிபர் ஆர்ச்பிஷப் மகாரியாஸ் அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 1-10-60 நாளிதழ்களில் வெளிவந்திருக்கிறது.

"நான் செய்யும் பணிக்காக ஆண்டுதோறும் தரப்படும் 5000/- பவுன் சம்பளத்தை நான் வாங்க விரும்பவில்லை. என்னுடைய தொண்டுக்குப் பணப்பரிசு ஏதும் தேவையில்லை" என்று அறிவித்திருக்கிறார். மகாரியாஸ் ஒரு ஆர்ச்பிஷப்—பாதிரி. பாதிரி என்னும் நிலைக்கேற்ப நடந்துகொள்ள முன்வந்திருக்கிறார். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என முடிவு செய்து அறிவித்திருக்கிறார். உண்மையிலேயே அவருடைய நாட்டுப் பற்றும் தன்னல மறுப்பும் போற்றிப் பின்பற்றப்பட வேண்டியவையாகும்.

இப்பொழுது ஒரு கணம் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். ஆவேசமாகப் பேசும் குருஷேவ், ஆத்திரமாகப் பதில் சொல்லும் ஐசனோவர், இருவரையும் சாந்தப்படுத்தும் மாக்மில்லன், அகில உலகிற்கும் சமாதானத் தூதுவராய் விளங்கும் நேரு—இவர்களையும் ஒரு புறத்தில் எண்ணிப் பாருங்கள். ஹோ-சி-மின், மகாரியாஸ்—இவர்களையும் ஒரு புறத்தில் எண்ணிப் பாருங்கள். வெகு சுலபமாக ஒதுக்கிவிடலாம், 'ஹோ-சி-மின் மகாரியாஸ் சின்னஞ்சிறு நாடுகளின் தலைவர்கள்தானே' என்று. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. தன்னல மறுப்பு எனும் பண்பை எடுத்துக்கொண்டு பார்த்தால் பெரிய நாடுகளின் தலைவர்கள் இவர்கள் அருகில் நிற்கக் கூட அருகதை அற்றவர்கள்! மகாரியாஸ் கொண்டுள்ள மனப்பான்மை, நம் நாட்டில் காந்தியடிகளுக்கு இருந்தது. இன்று அவர் வழிச் செல்வோர்க்கு இல்லை. எனவேதான் அல்லல்படுகிறோம்.

★

# ஏழையின் கண்ணீர்

—[மு. குமணன்]—

இரண்டு மூன்று நாட்களாக வானம் மப்பும் மந்தாரமுமாக மூடிக்கிடந்தது. சிறுத்தூறல் சிணுசிணுத்துக் கொண்டிருந்தது. தெருவெல்லாம் புழுதிச் சேறாக மாறிச், சென்னை நகரின் வனப்பையே சீர்குலைத்திருந்தது. ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ விடாது பெய்து வெள்ளமெடுத்திருந்தாலும் பரவாயில்லை. இப்படி நாள் முழுவதும் அழுதுகொண்டிருந்தால்...? பாதிக்கப்படக்கூடியவர்கள் பெரும்பாலும் 'ரிக்ஷா' 'கைவண்டி' இழுக்கும் நடைபாதை வாசிகளாவர், என்பதை நாடறியும்.

மாணிக்கம் ஒரு ரிக்ஷாக்காரன். அன்று பூராவும் ஒரு நயா பைசாவுக்குக்கூட வழியில்லை. ஒற்றைவாடை நடைபாதையின் ஓரத்தில் அவனை வாழவைக்கும் 'தெய்வம்' தனிமரம்போல் நின்றுகொண்டிருந்தது.

"மாணிக்கம்" என்று வழக்கமான குரல் ஒன்று அழைத்தது.

"ஏறுங்க சாமி" வண்டி பெரியமேட்டுப் பகுதி நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. வண்டியில் இருக்கும் அந்த ஆசாமியைக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாக அவன் அறிவான். தூறல் தூறிக்கொண்டிருந்தாலும், வாடிக்கைக்காரரான அவரை, மாணிக்கத்தால் தவிர்க்கமுடியவில்லை. அவன் தலையில் கட்டியிருந்த 'பிளாஸ்டிக்' துணியில் விழுந்துகொண்டிருந்த முகிலின் கண்ணீர், இரவின் கண்ணீராகக் காட்சியளித்தது.

வண்டி வாழைத்தோட்டத் தெருக் கோடியில் போய் நின்றது.

"மாணிக்கம்! மழை விட்டதும் போகலாம். வந்து 'வராண்டாவில்' நில்லுப்பா" என்றார் வண்டியில் வந்த பெரியவர்.

"சாமி! உங்க ஸ்டுடியோவிலே, ஏதாச்சும் கூலிவேலை இருந்தால் சொல்லுங்க. இப்படி மழையிலும் வெயிலிலும் மாடா வண்டி இழுத்தும் கால்வயிறுகூட நிரம்பலீங்க" என்று கூறியபடி தொப்பலாக நனைந்திருந்த—கிழிந்த வேட்டியைப் பிழிந்துவிட்டான்.

"என்ன செய்வது மாணிக்கம். நாம் வந்த வழி அப்படி! உன்னைப் போன்ற ஏதுமறியாதவர்களுக்கு அங்கு வேலை கிடைப்பது அரிது. வேண்டுமானால் நாளையிலிருந்து, நான் ஒரு 'சைட் பிசினஸ்' செய்யப் போகிறேன். அதற்கு ஒரு ஆள் தேவைப்படுகிறது. ஆனால், கொஞ்சம் கடினமானது."

"எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் பரவாயில்லீங்க."

"அவ்வளவு கடினம் ஒன்றுமில்லை. தினமும் ஸ்டுடியோவிற்கு என்னுடன் ஒரு பெட்டியைக் கொண்டுவரவேண்டும். மாலையில் அந்தப்பெட்டியை இங்கு கொண்டு வரவேண்டும். அவ்வளவுதான்."

"சரிங்க."

"இந்தா ரூபா இருபது. போய் நல்ல துணியாக வாங்கிக் கட்டிக்கொண்டு, நாளை காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் வந்துவிடு. மாதம் சம்பளம் அறுபது! போதுமா?"

"போதுங்க. நீங்க நல்லா இருப்பீங்க" ஏழையின் மனம் களிப்புக் கடலில் நீந்தி விளையாடியது. மாணிக்கத்தின் வாழ்வில் புத்தொளி வீசியது. கால் வயிற்றுப் பிழைப்பிற்குக் காக்காயாகப் பறந்த அவன், ஸ்டுடியோத் தொழிலாளி சின்னத்துரையால் ஏதோ பசியாறக் கஞ்சி குடிக்க வழி ஏற்பட்டது. நடைபாதை வாழ்வு கொசப்பேட்டைப் பகுதியில் 'எட்டடி'க் கொட்டடியில் துவங்கப்பட்டது.

மாதங்கள் ஆறு கடந்தன.

அந்த நூற்றெண்பது நாட்களில் ஒரு நாள்கூடத் தான் எடுத்துச் செல்லும் பெட்டியில் 'என்ன?' இருக்கிறது என்பதை அவனால் அறியமுடியவில்லை. பெட்டியில் இருப்பதை அறிய மாணிக்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. 'மர்மம்' மட்டிலும் வெற்றிப்பாதையில் பவனி வந்தது.

சின்னத்துரைக்கு ஓடி ஆடி வேலைசெய்ய வயோதிகம் தடைவிதித்தது. ஸ்டுடியோ வேலையை 'இராஜினாமா' செய்துவிட்டார். ஆனால், அவர் ஆரம்பித்த 'சைட் பிசினஸ்' மட்டிலும் பீடுநடை போட்டுக்கொண்டிருந்தது. மாணிக்கம் தனியாகவே பெட்டியை ஸ்டுடியோவிற்கு எடுத்துச் செல்வதும் வருவதுமாக இருந்தான்.

அன்று காலையில் மாணிக்கம், சின்னத்துரை வீட்டிற்கு வந்தபோது, அவரைக் காணவில்லை. ஆயினும் வழக்கமாக எடுத்துச் செல்லும் பெட்டி மட்டிலும் பூட்டப்பட்டுத் தயாராக இருந்தது. இரண்டு மணி நேரம் காத்திருந்து பார்த்தான். பயன் இல்லை. நேரம் அதிகமாகவே, பெட்டியை எடுத்துக்கொண்டு படப்பிடிப்பு நிலையம் நோக்கிப் புறப்பட ஆயத்தமானான்.

வெளியில் 'டாக்ஸி' ஒன்று வந்து திடீர் என்று நின்றது. சின்னத்துரைதான் டாக்ஸி கொண்டு வந்து இருக்கிறார் என்று எண்ணிப், பெட்டியை எடுத்துக்கொண்டு மாணிக்கம் வெளியில் வந்தான். அப்போது அவன் கண்ட காட்சி அவனை ஆட்டிப் படைத்தது. இரு போலீஸ்காரர்களோடு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் தன்னை நோக்கி வருவதைக் கண்டான்.

"பெட்டியில் என்ன இருக்கிறது?" சப்-இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"பெட்டியிலா?... பெட்டியில்..." என்று இழுத்தான்.

"ஆமாம்! பெட்டியில்தான்"

"தெரியாதுங்க"

"தெரியாதா?... ஒன் நாட் ஒன்! பூட்டை உடைத்துப் பாருய்யா"

பெட்டி திறக்கப்பட்டது. மாணிக்கம் ஆறு மாதங்களாகக் காணத் துடித்துக்கொண்டிருந்ததைக் கண்டு அச்சத்தால் அலறினான். பத்துப் புட்டிகளில் மேல்நாட்டு மதுவகைகள் சிறை வைக்கப்பட்டிருந்தன. புட்டியின் மேலிருந்த 'லேபின்'கள் கட்டியம் கூறி நின்றன. அவன் ஒன்றும் புரியாமல்

சுழலில் சிக்கிய கலமெனத் தவித்தான். மாணிக்கத்தின் தோள் மீதிருந்தக் கரைபோட்ட துண்டு, அவன் கரங்களை இறுக்கிக் கட்ட உதவி புரிந்தது.

"ஐயா! இதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதய்யா, இந்த வீட்டில்இருக்கும் சின்னத்துரை.." வார்த்தைகள் வெளிவரமறுத்தன.

"எல்லாம் எங்களுக்குத் தெரியும். அந்தக் குடிகாரத் துரை' ஸ்டேஷனில் இருக்கிறார். அவருக்குத் துணைக்கு ஆள் தேவையாம்! வாடா திருட்டுப்பயலே!" என்று ஒரு போலீஸ்காரன் பிடித்து வண்டிக்குள் தள்ளினான்.

நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது 'மாணிக்கம் ஒன்றும் அறியாத நிரபராதி — அப்பாவி' என்று எதிர்த்து வழக்காட நாதியில்லை. கள்ள மதுவகைகள் விற்ற குற்றத்திற்காகவும், மதுவருந்திய குற்றத்திற்காகவும், சின்னத்துரைக்கு ஆறு மாதங்கள் கடுங்காவலும்; அவருக்குத் துணையாக மதுவிற்ற குற்றத்திற்கு மாணிக்கத்துக்கு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அடுத்த மாதம் ஒரு மகவுக்குத் தாயாகப்போகும் மாணிக்கத்தின் மனைவி தீர்ப்பைக் கேட்டு 'ஐயோ' வெனக் கதறி அழுதாள்.


"மாடாக ரிக்ஷா இழுத்திருந்தாலும், மானத்தோடு வாழ்ந்திருப்போமே!... இப்படி மனைவியைத் தவிக்கவிட்டுப் பிரிய நேர்ந்ததே" என்று உள்ளுக்குள் அந்த ஏழை நெஞ்சம் குமுறியது.

ஆறு மாதங்கள் வறுமையில்லாதிருந்த அக்குடும்பம், மீண்டும் நடைபாதைக்கே தூக்கி எறியப்பட்டது. சிறைக்கூடத்தில் நித்தம் நித்தம் பெருக்கெடுத்துக்கொண்டிருந்த ஏதுமறியாத ஏழையின் கண்ணீரை யாரால் துடைக்க இயலும்! ●

---

அரசுகளை ஆட்டிவைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த சக்தி, மேடைப் பேச்சு. அத்தகைய சக்தியை மக்களில் பெருவாரியானவர்கள் பெறுவதற்கு முயலவேண்டும். அங்ஙனமின்றி அந்தச் சக்தி ஒரு சிலரிடம் மட்டுமே இருக்குமானால் மக்களின் நலன், பாறை மோதிய கலமாகும்.

---




அதோ தெரிகிறது பாருங்கள் நீர் நிலை, அதற்குப்பெயர் ஊருணி. அதற்குப் பெயர்தான் ஊருணி. ஆனால் அந்த நீரை யாரும் குடிப்பதற்குப் பயன்படுத்துவதில்லை. குளிப்பதற்குத்தான் பயன் படுத்துகிறார்கள். ஊருக்குச் சற்றுத் தள்ளி அது இருக்கிறது. குளிப்பதற்கு வசதியாக இருக்கிறது. வட்டவடிவாக அமைந்திருக்கும் அதன் கரையைச் சுற்றிலும் நல்லமரங்கள் — குளிர் தருக்கள் நிற்கின்றன. வெயில் காலத்தில், நடுப்பகல் வேளையில், அதோ எதிர்க்கரையில் நிற்கின்றது பாருங்கள் பெரிய ஆலமரம், அதனடியில் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். இன்று அங்கு யாரையுமே காணவில்லையே என்கிறீர்கள்?— அதைக்கூடவா நான் அறிந்து சொல்லவேண்டும்? மாலைநேரம். குளிராகவேறு இருக்கிறது. நீங்களும், நானும்தான் வேலை ஏதும் இல்லாததால் சும்மா உலாவிவிட்டு வரலாமென்று வந்துள்ளோம். எல்லாரும் இப்படி இங்கே வரவேண்டுமா என்ன?—அட, இந்தக் குளிர் வேளையிற்கூட ஒரு ஆள் அங்கே தன்னந்தனியனாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றானே! யார் அது? —ஓகோ, அவனா? அவனைத் தெரியுமா உங்களுக்கு? தெரியாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே ஒரு நாள். இதேபோல் மாலை வேளை தான் அன்றும். அவன் — சோமு இங்கே ஓடிவந்தான். ஏதோ அவசரவேலை. சீக்கிரம் குளித்துவிட்டுப் போகவேண்டும். பரக்கப் பரக்க உடைகளைக் களைந்து வைத்துவிட்டு நீருக்குள் இறங்கினான். இடுப்பளவு நீர்வரை போய்விட்டான்.

"ஏய்யா, உனக்குக் கண்ணு தெரியலே!" கரையிலிருந்து இடியொன்று இடித்து அவன் செவிப் பறையைக் கிழித்தது. அவன் திரும்பிப் பார்த்தான். கரையில் நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட ஓர் அம்மை நின்றுகொண்டிருந்தாள்.

"ஏன் அந்த அம்மை அப்படிக் கூச்சல் போடுகிறாள்?" அவனுக்கு அப்போதும் விளங்கவில்லை.

"ஏய்யா, சொல்றது புரியலே? இன்னும் நின்னுக்கினே இருக்கிறியே! வாய்யா இப்படி! எதிரே பொண்ணுப் பொறந்தது குளிக்கிறது தெரியலே?"

அப்போதுதான் அவன் முன்னால் பார்த்தான். நீரில் நின்றவன் நெருப்பில் மூழ்கியவன் ஆனான். ஒரே பாய்ச்சலில் கரைக்கு வந்தான். 'ஆமாம், அங்கே குளித்துக் கொண்டிருப்பது யார்?' அவன் நீர்த்துறையைப் பார்த்தான். அவ்வளவுதான். அவனைத் தூக்கி வாரிப் போட்டவில்லை. அவன் உள்ளமே அடங்கிவிடும்போலிருந்தது. எதிர்வீட்டு அலமேலுதான் அவள். புதிதாக மணமாகி வந்திருப்பவள். அவள் வந்ததுமுதல் அந்த வீட்டில் ஓயாத, ஒழியாத கூச்சல், குழப்பம், சண்டை. அவள் கணவன் ஒரு முரடன். மாமியார் இடத்தில் இருப்பவளோ பேயுருவும், பேய்க்குணமும் கொண்டவள். கரையில் நிற்கும் அந்தப் புதியவள் யார்?—அந்த மாமியாரின் சாயல் அவளிடத்தில் தென்படுகிறது. அலமுவின் சிறிய மாமியாரோ அவள்?

"ஓகோ, இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா நீ! இதுக்குத்தான்

தனியா, குளிச்சுட்டு வந்துடறேன்னு பரக்கப் பரக்க ஓடிவந்தியா?—அப்படியா சேதி? எவனோ தடிப்பயலோடுகொஞ்சி விளையாடிக் குளிக்கத்தான் இந்த அவசரமா? வா, வா! இன்னிக்கு இரண்டிலே ஒண்ணு முடிவு கட்டிடச் சொல்றேன்.''

கரையில் நின்றவள் பொரிந்து கொட்டினாள். சோமு விறைத்து, வெலவெலத்துப் போய் நின்றான்.

"அம்மா, இவ்வளவு பெரிய பழியை என்மீது போட்டாற்கூடப் பரவாயில்லை. அந்தப் பெண்மீது போடுகின்றீர்களே! யோசித்துப் பேசுங்கள் அம்மா!''

"ஏ! என்னைப் பார்த்து யோசிச்சுப் பேசுன்னு சொல்றே நீ! உங்க இரண்டு பேரையும் போலே நான் நீச்சுகிலை தெரியாமே திரியறேன்னு நெனைச்சுக்கிட்டே நீ! உன்கிட்டே என்ன பேச்சு! ஊரிலே சொல்லி, உங்க இரண்டுபேரையும் அங்கே விசாரிக்கச்சொல்றேன்!--அடி அநியாயமே! இதுஎன்ன, ஊரா, பாழா? ஒரு பொண்ணு, பெரிசு, ஊரிலே ஒண்டி சண்டியா போகமுடியாமே போச்சுதே!'' என்று அகங்காரத்துடன் பெருங்கூச்சல் கிளப்பினாள் அந்த வெளியூர்க்காரி.

மேலும் அங்கு நின்றால் அவமானக் கூத்துத்தான் பெருகும். சோமு அதை உணர்ந்தான். தன் அவசர வேலைகளை எல்லாம் மறந்தான். இன்னும் அவனுக்குப் பித்தம் பிடிக்கவில்லை. அதற்குமேல் குளிப்பதற்குத்தான் அவனுக்கு எண்ணம் வருமா? இடுப்பளவு நனைந்ததோடு சரி. அவசரமாக வேட்டியை எடுத்துச் சுற்றிக்கொண்டு, சட்டையை மாட்டிக்கொண்டு அவன் கிளம்பினான்.

தன் அறைக்குள் நுழைந்த சோமு அங்கேயே அடைபட்டுக் கிடந்தான். நன்றாக இருட்டிவிட்டது. தெருவெல்லாம் விளக்குகள் ஒளிவீசத் தொடங்கின. அவனுடைய அறைக்குள் வெளிச்சமே கிடையாது. அங்கு இருள் மண்டிக் கிடந்தது — அவன் உள்ளத்தை இருள் கப்பி அடைத்துக்கொண்டதுபோல்.

எதிர் வீட்டில் அந்தப் புதியவளின் குரலோடு அங்கிருக்கும் மாமியாரின்குரலும் அடிக்கடி ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது.

சரியாக இரவு ஒன்பது மணிக்குத்தான் அலமுவின் கணவன் அங்கு வந்தான். பின்னும் பெருகின அங்கு ஒலிகள். அந்த வெளியூர்க்காரியும், மாமியாரும் சேர்ந்து கிளப்பிய இடிக்குரல்களோடு, அந்த முரடனின் — அலமுவின் கணவனின் கைகிளப்பிய, அடிக்கின்ற பேரொலியும், அவற்றைத் தொடர்ந்து—புகலிடம் இல்லாமல் அந்த வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தபடி அலமேலு கிளப்பிய அவல ஒலியும்—அழுகுரலும் ஒரே காலத்தில் பெரும் பேரொலியாகக் கிளம்பின. ஊரே அங்கு கூடிவிட்டது—இரவு வேளை என்றும் பாராமல். சாளரத்தின்வழியே தலையை நீட்டிச் சோமு எட்டிப் பார்க்கவில்லை. அதனருகே மறைந்து நின்று, ஒண்டி ஒடுங்கியபடி எதிர்வீட்டில் நிகழ்கின்றவற்றை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அடிக்கொருதடவை சோமுவின் பெயர் அங்கே அடிபட்டுக்கொண்டிருந்தது. வருவோர் போவோர் எல்லாருமே சோமுவின் அறையை ஏதோ விந்தைப் பொருள் ஒன்றைப் பார்ப்பவர்கள் போல் ஏறிட்டு, ஏறிட்டுப் பார்த்தனர். அங்கே தெருவிளக்கின் ஒளிமூலம் அந்நிகழ்ச்சிகள் எல்லாம் சோமுவின் கண்களில் நன்றாகத் தட்டுப்பட்டன.

வந்தோர் எல்லாம் தங்கள் தரத்துக்கும், குணத்துக்கும், பண்புக்கும் ஏற்றவாறு, சோமுவைப்பற்றியும், அலமேலுவைப்பற்றியும்; காலம் கெட்டு மாறிவிட்டதைப் பற்றியும், விதவிதமாகத் திறனாய்வு செய்து பேசிவிட்டுப் பேசிவிட்டுப் போயினர். அவை எல்லாம் ஒன்று கூட விடாமல் சோமுவின் காதுகளில் வந்து விழுந்தன.

வந்தவர்கள் எல்லாரும் போய் விட்டனர். தெருவில் அரவம் இல்லை. மற்ற மற்ற வீடுகளில் அரவம் இல்லை. ஊரே ஒலிமாய்ந்து கிடந்தது. ஆனால், அந்த வீட்டில் —பேசுவோரின் பேய்க்குரலும், அடிப்பதால் கிளப்பும் இடியோசையும், அழுகின்ற அலமுவின் அவல ஓசையும் ஒன்று கலந்து பேரொலியாக விட்டுவிட்டு வீறிட்டுக் கிளம்பிக்கொண்டிருந்தன, — விட்டுவிட்டுப் பெய்யும் பெருமழைபோல் கேட்டுக்கொண்டே இருந்தன.

சோமு உறங்குவானா? அவனுக்கு உறக்கந்தான் வருமா? சுவரில் சாய்த்துவைக்கப்பட்டிருக்கும் பிணத்தைப்போல் அவன் சுவரோடுசாய்ந்தபடி நின்றுகொண்டே இருந்தான். இரவு முழுதும் நின்றுகொண்டே இருந்தான். எதிர்வீட்டு நிகழ்ச்சிகளை அவன் உற்று ஊன்றி, அந்த இருளின் ஊடே பார்த்தபடி, கவனித்தபடி நின்றுகொண்டே இருந்தான்.

சரியாக இரவு நடுக்கூறு ஆயிற்று. இன்னும் அங்கே கூச்சல் குறையவில்லை. திடீரென்று ஒரு பேரொலி. அதைத்தொடர்ந்து 'ஐயோ' என்ற அஞ்சுதல் நிறைந்ததோர் அவல ஒலி. அவ்வளவுதான், அதன் பிறகு அங்கு ஓசையே கிடையாது. எதுவோ ஒடுங்கிப்போய்விட்டது. எல்லாம் அடங்கிப்போய்விட்டன.

சோமு இன்னும் நின்றுகொண்டிருந்தான் — சாளரத்தின் எதிரே சுவரில் சாய்ந்தபடி. அவன் உடல் மரத்தாற்போல்தோன்றியது. உள்ளம் அலமந்து, அலமந்து ஓய்ந்து கிடந்தது. ஆனால் கண்கள் மட்டும் இயங்கிக்கொண்டிருந்தன; எதிர் வீட்டை உற்று நோக்கிக்கொண்டிருந்தன.

எங்குமே ஓசை இல்லை. அனைத்தும் அமைதியில் துயின்றன. ஆனால் எங்கோ ஓரிடத்திலிருந்து மிகத் தாழ்ந்த குரலிற் பேசுகின்ற பேச்சொலி மெல்லவந்து சோமுவின் காதுகளில் மோதுவதுபோல் தோன்றியது. அது எங்கிருந்து? எதிர்வீட்டிலிருந்துதானா? ஆமாம், அப்படித்தான் இருக்கவேண்டும். அந்தச் சிற்றொலி விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டு இருந்தது. சற்று நேரத்துக்குப்பின் 'கிறீச்' என்ற, சற்றே உரத்த பிறிதொரு சிற்றொலி. எதிர்வீட்டுக் கதவு மெல்லத்திறக்கப்படுகிறது. அங்கிருந்து ஓர் உருவம் வெளிப்படுகிறது. அந்த உருவம் ஏதோ கனமான மூட்டை ஒன்றைத் தூக்கிக்கொண்டு போகிறதே! அதோ, மிக விரைந்துபோகிறதே!

சோமுவால் நிற்க முடியவில்லை' கால்கள் வலிவிழந்துவிட்டன. கண்கள் ஒளி இழந்து தோன்றின. மூளை குழம்பியது. தலை சுற்றியது. அப்படியே தரையில் வீழ்ந்தான் அவன்.

திரும்பவும் அவன் எழவில்லை. எழுப்பப்பட்டான். தன்னுணர்வு பெறவில்லை. பெறுமாறு செய்யப்பட்டான். எழுந்து நிற்கவில்லை. நிற்குமாறு செய்யப்பட்டான். அவன்மீது எதிர்வீட்டுக்காரன்—அலமேலுவின் கணவன முறையீடு செய்துவிட்டான் காவல் நிலையத்தில். எப்படி முறையீடு?

பதிவு எண். எம். 4642
தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

அன்று நள்ளிரவு வரை வீட்டிலிருந்த அலமேலு திடீரென்று மறைந்துவிட்டாளாம். வீட்டிலிருந்த விலையுயர்ந்த பொருள்களும் கடத்தப்பட்டிருக்கின்றனவாம். அந்தச் செயற்களுக்கெல்லாம் சோமுதான் முன்னிலையாக இருக்கவேண்டுமென்று அலமேலுவின் கணவன் மட்டுமல்ல, அந்த வீட்டிலுள்ள மற்றவர்கள் அனைவரும் மட்டுமல்ல, இரண்டொரு அக்கம் பக்கத்தார்கள் கூட— சும்மா, வெறும் ஐயம் கொள்ளவில்லையாம்—உறுதியாக நம்புகின்றார்களாம்.

எங்கே 'செல்கிறோம்' என்று தெரியாமலே சோமு நடந்தான். யாரைத் 'தொடர்கிறோம்' என்று உணராமலே காவல் வீரர்களை அவன் பின் தொடர்ந்தான்.

காவல் நிலையத்தில் சோமு பேசவில்லை. பேசுமாறு செய்யப்பட்ட முயற்சிகள் எல்லாம்—அடித்தல், உதைத்தல், வதைத்தல் முதலான முயற்சிகள் எல்லாம் பலிக்கவில்லை. அவன் ஒரு கைதேர்ந்த கடத்தற்காரனாக, குற்றவாளியாக அங்கே தென்பட்டான். அவன் சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டான். அவன்மீது குற்றச் சாட்டுகள் கூறும் சான்றுகள் குவிந்து கிடந்தன. அவனைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள் ஊரில் இல்லாமலில்லை. ஆனால் அவர்களில் ஒருவர்கூட அவன் சார்பில் சான்று பகர முன் வந்தார்கள் இல்லை. 'யாருக்குத் தெரியும்? ஒரு வேளை சோமுவே குற்றவாளியாக ஏன் இருக்கக்கூடாது?' என்று ஐயப்பட்டவர்கள் அவர்களிலே சிலர். 'இந்தத் தொல்லையிலே நாம் ஏன் வீணே தலையிட்டு மாட்டிக்கொள்ளவேண்டும்'? என்று ஒதுங்கி நின்றவர்கள் சிலர்.

வழக்கு நடந்தது. நடந்துகொண்டே இருந்தது. சோமுவின் வாக்கு மூலம் யாராலும் எவ்வகையாலும் பெறப்படாமலே கிடந்தது. அவன் சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டே கிடந்தான்.

திடீரென்று ஒரு நாள்: நன்றாக அடைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த உண்மை எப்படியோ கசிந்துகொண்டு வெளியே தலை காட்டிவிட்டது.

ஊருக்கு மேற்கே ஒரு பனங்காடு. அந்தப் பனங்காட்டை அடுத்து ஒரு பொட்டல் வெளி. அந்தப் பொட்டல் வெளியிலே ஒரு பாழுங் கிணறு. யாரோ சுள்ளி பொறுக்கப் போனவர்கள் அந்தப் பாழுங் கிணற்றிலிருந்து வீசிய பிண நாற்றத்தைத் தாங்க முடியாமல் மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடி வந்தார்கள். அந்தச் செய்தி ஊர் முழுதும் மெல்லக் கிளம்பி, மிக விரைந்து பரவியது. சில நாட்களுக்குப் பிறகு அந்தச் சாமானிய செய்தி காவல் நிலையத்துக்கு எட்டிற்று. வேறு எதையோ ஐயப்பாடாக வைத்துக்கொண்டு காவல் நிலையத்தார் அதை—அதாவது அந்தக் கிணற்றுக்குள் மூட்டையாகக் கட்டப்பட்டு, போடப்பட்டிருந்த பிணத்தைப்பற்றி ஆராயப் போனார்கள் — அல்லது புலன் காணப் போனார்கள். அது என்னவென்றால், சோமுவின் வழக்கோடு சம்பந்தப்பட்டதாக முடிந்துவிட்டது.

கடைசியில்உண்மைக்குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்கப்பட்டான். அந்தக் குற்றவாளி அலமேலுவின் கணவன்தான் என்ற செய்தி கேட்டதும், ஊரே மூக்கின் மீது விரல் வைக்கவில்லை. ஏனென்றால், அது எல்லாருக்கும் தெரிந்த மறை பொருள்.

என்றாலும், அதுவரை சோமுவின்மீது இரக்கங் காட்டாதவர்கள் எல்லாம், அப்போது இரங்கல் உரை பகர்ந்தார்கள். மூச்சு விடாதவர்கள் எல்லாம் 'என்றாவது ஒரு நாள் உண்மை வெளிப்படும்—எனக்கு அப்போதே தெரியும்' என்று பேச்சை வெளியில் விட்டார்கள். சிந்திக்காதவர்கள் சிந்தித்தார்கள். எண்ணாதவர்கள் எண்ணினார்கள்.

சோமு வெளியில் அனுப்பப்பட்டான். அவன் பித்தம் பிடித்தவன் போல் காட்சியளித்தான். விந்தைதான்! பித்தம் பிடித்தவன் ஆகிவிடாமல், பித்தம் பிடித்தவன் போல் அவன் காட்சி தந்தது. யாரும் அவனோடு பேசுவதில்லை. அந்தத் துணிச்சல் அவனுடைய மிக நெருங்கிய நண்பர் எனப்பட்டோர்க்கும் வரவில்லை. அதோ அந்த இடத்தில் அந்த ஆலமரத்தடியில் நாள் முழுதும் அமர்ந்திருப்பதுதான் அவன் வேலை.

★

தலைமை நிலைய அறிக்கை (அ) 3/60

## கழக இடைத் தேர்தல்கள்

### வட்ட—மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

மேல் அமைப்புக்களின் நிர்வாகக் குழுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக, கீழ் அமைப்பின் நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியிருக்கும் தோழர்கள், முறைப்படி வட்ட—மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒப்புதலுடன் தலைமைக் கழகத்திற்குத் தாங்கள் விலகிக்கொள்ள விரும்பும் பொறுப்புக்கான விலகல் மடலை அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

கீழ் அமைப்புக்களில் தாங்கள் வகித்துவந்த பொறுப்பு—மேல் அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதவி ஆகியவைகளைத் தெளிவாக ஒரு வார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டுகிறோம்.

இந்தப் பதவிகளுக்கு விரைவில் முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என்பதையும் வட்ட—மாவட்டக் கழக நிர்வாகிகள் நினைவில் கொண்டு ஆவனசெய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13.
10—10—1960

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர்

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.